ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2512 - 2026 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2026.10.23

2512 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	3660	பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	3677

கவனிக்க .- (i) த குட்நஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2026.10.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2026.10.16 ஆந் திகதியஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்த்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. சொன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு எதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுதுது மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை தரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

பதவிகள் - வெற்றிடம்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தொழில் நியாய சபைகளின் உதவிச் செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2026

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள தொழில் நியாய மன்றுகளில் வெற்றிடமாக உள்ள 13 உதவிச் செயலாளர் பதவிகளை பூரணப்படுத்தி இணைந்த சேவையின் தகைமைபெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, செயலாளர், தொழில் நியாய சபை செயலாளர் அலுவலகம், இல 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு, பின்வரும் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். உறையின் மேல் இடது மூலையில் " தொழில் நியாய சபை செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கோருவதற்கான இறுதித் திகதி 2026.11.23 ஆகும்.

இணைந்த சேவையில் உள்ள தரம் I ஐச் சேர்ந்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் .

குறிப்பு - விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்து போவது அல்லது தாமதம் ஏற்படுவது குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதத்தால், இறுதித் திகதி வரை ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே ஏற்க வேண்டும்.

01. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மேலும் அந்த அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவால் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

02. பதவியின் தன்மை -
இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்தை உரித்துடையதுமாகும்.

03. சம்பள விகிதம் -
MN 2 – 2025 - ரூபா . 48,470-10X540-11X630-10X1,010-10X1,190 – 82,800.00

04. அடிப்படைத் தகைமைகள் -
இணைந்த சேவையைச் சேர்ந்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தராக இருத்தல்.

05. தெரிவு செய்யப்படும் முறை -
கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில், தகைமை வரிசைப்படி தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கும் நடைமுறைகள், தொழில் நியாய மன்றத்தின் வெற்றிடங்கள் குறித்த தகவல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் ஆகியவை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.moj.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன.

06. விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்தால் தெளிவாக நிரப்ப வேண்டும். எந்த வகையிலாவது முழுமையற்ற, அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத, உரிய திகதிக்குப் பிறகு பெறப்படுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்டதாக எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

அனைத்து விண்ணப்பங்களும், தற்போது பணிபுரியும் நிறுவனத்தின் தலைவர் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

07. இங்கு குறிப்பிடப்படாத ஏதும் விடயம் இருப்பின், அது தொடர்பாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டவிதிகளின் படி நடவடிக்கைகளை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளனர்.

08. இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் , சிங்கள ஊடக வெளியீடே செல்லுபடியாகும் .

சனாதிபதி சட்டத்தரணி அயெஷா ஜினசேன,
செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,
2026/...../.....

இல..... (அலுவலக உபயோகத்திற்கு)

மொழி மூலம்	சிங்களம்	
	தமிழ்	

மாதிரி விண்ணப்பப்படிவம்
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

தொழில் நியாய சபைகளின் உதவிச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. (அ) முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (சிங்களத்தில்/தமிழில்) - .....
.....
முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) - .....
.....
(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) - .....
.....
முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) - .....
.....

2. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) - .....
.....

3. நிரந்தர முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்) - .....
.....

4. கடிதங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்துக்களில்) - .....
.....
(நிரந்தர முகவரியிலிருந்து மாறினால் மட்டும் பூர்த்தி செய்யவும்)

5. தொலைபேசி இல - தனிப்பட்டது : ..... அலுவலகம் : .....
(வாட்ஸ் ஆப்)

6. மின்னஞ்சல் முகவரி -.....

7. தேசிய ஆளடையாள அட்டை இல – | | | | | | | | | | | | |

8. பெண்/ஆண்

பெண்	
ஆண்	
வேறு	

9. பிறந்த திகதி - வருடம் ..... மாதம் ..... நாள் .....

10. பிரஜா உரிமை - .....

11. திருமணமானவர்/திருமணமாகாதவர் - .....

12. தற்போதைய சேவை நிலையம் மற்றும் பதவி - .....
.....

13. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி - .....

14. வேறு தகைமைகள் (புள்ளிவழங்கல் நடைமுறையில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின்படி குறிப்பிடவும்) -
.....
.....
.....
.....

15. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா?
[பொருத்தமான கட்டத்திற்குள் (√) குறியிடவும்] ஆம்: ☐ இல்லை: ☐

(ஆம் எனில், விவரங்களை வழங்கவும்) .....
.....

16. உங்கள் மீது தீர்க்கப்படாத ஒழுக்காற்று நடவடிக்கை ஏதேனும் உள்ளதா ?
[பொருத்தமான கட்டத்திற்குள் (√) குறியிடவும்] ஆம்: ☐ இல்லை: ☐

(ஆம் எனில், விவரங்களை வழங்கவும்) .....
.....

17. நீங்கள் தகைமைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டால், நீங்கள் பணியாற்ற விரும்பும் 3 தொழில் நியாய மன்றுகளை வரிசைப்படி பட்டியலிடவும்.

1. .....
2. .....
3. .....

(தொழில் நியாய மன்ற பட்டியல், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நீங்கள் தேர்ந்தெடுத்த நிறுவனத்திற்கு நீங்கள் இணைப்பு செய்யப்படும் என்பதற்கு இதனை ஒரு உத்தரவாதமாகக் கருதக்கூடாது.)

18. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

I. இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள், எனக்குத் தெரிந்தவரை உண்மையானவை என்றும் சரியானவை என்றும்

II. இந்தப் படிவத்தின் எந்தவொரு பகுதியையும் பூர்த்தி செய்யத் தவறுவதாலோ மற்றும்/அல்லது தவறாகப் பூர்த்தி செய்வதாலோ ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பையும் நான் ஏற்றுக்கொள்வேன் என இதன்மூலம் உறுதியாக அறிவிக்கிறேன். மேலும், இந்தப் படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் நான் அறிவிக்கிறேன்.

II. நான் அளித்த இந்தக் கூற்று உண்மையில்லை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்பே நான் தகுதியிழப்பு செய்யப்படுவேன் என்பதையும், நியமனத்திற்குப் பிறகு பணி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

III. இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் எதையும் நான் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

....
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

19. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்பிக்கின்ற திரு./திருமதி./செல்வி. ..... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ...../...../..... அன்று என் முன்னிலையில் தமது கையொப்பமிட்டார் என்றும் நான் சான்றளிக்கிறேன்.

....
திகதி கையொப்பத்தை சான்றளிக்கும்
அதிகாரியின் கையொப்பம்

சான்றளிக்கும் அதிகாரியின் முழுப் பெயர் : .....
பதவி : .....
முகவரி : .....
(பதவி முத்திரையுடன் சான்றுப்படுத்தவும்)

20. நிறுவனத் தலைவரிடமிருந்து சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி./செல்வி ..... அவர்கள் ...../...../..... ஆம் திகதி முதல் இந்த நிறுவனத்தில் ஒரு நிரந்தர/தற்காலிக/அமைய அலுவலராகப் பணியாற்றி வருகிறார் என்றும், அவர் மேலே அளித்த தகவல் சரியானது என்றும், அந்த அலுவலருக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்றும், ஒழுங்காற்று நடவடிக்கை தொடங்குவதற்கு இல்லை என்றும், விண்ணப்பம் கோருகின்ற அறிவித்தலின்படி அவர் இதற்கு தோற்றுவதற்கு தகுதியானவர் மேலும், அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் அல்லது விடுவிக்கப்படாமலும் இருக்கலாம் என்றும் இதன்மூலம் நான் அறிவிக்கிறேன்.

.....
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

திகதி - .....
பெயர் - .....
பதவி - .....
அமைச்சு/திணைக்களம் - .....

கட்டமைப்புசார்ந்த நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை

01. கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் தொடர்பான அறிவு - 10 புள்ளிகள்
02. இலங்கையின் நீதித்துறை தொடர்பான அறிவு - 10 புள்ளிகள்
03. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

i. சான்றிதழ் பாடநெறி - - 10 புள்ளிகள்
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்காக (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக 05 சான்றிதழ்களுக்கு)

ii. பயிற்சி - 10 புள்ளிகள்
- முழு சேவைக்காலத்தினுள் தாபனக்கோவை, நிதி ஒழுங்கமுறைகள், மனிதவள முகாமைத்துவம், பொதுமக்கள் தொடர்பு, சம்பளம், ஒழுக்கம், தனிப்பட்ட கோப்பு போன்ற மற்றும் கடமை விடயப்பரப்பு அடையப்படும் வகையில் பெற்றுக்கொண்டுகள்ள பயிற்சிகளுக்காக (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக 05 சான்றிதழ்களுக்கு

} 40 புள்ளிகள்

iii. ஆங்கில அறிவு - 10 புள்ளிகள்

- டிப்ளோமா பாடநெறிக்கு - 06 - 12 மாதங்கள் வரை - (10 புள்ளிகள்)
- சான்றிதழ் பாடநெறிக்கு - 03 - 06 மாதங்கள் வரை - (05 புள்ளிகள்)

வேறு (03 புள்ளிகள்)

(உயர் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்)

iv. கணினி அறிவு - 10 புள்ளிகள்

டிப்ளோமா பாடநெறிக்கு - 06 - 12 மாதங்கள் வரை - (10 புள்ளிகள்)
சான்றிதழ் பாடநெறிக்கு - 03 - 06 மாதங்கள் வரை - (05 புள்ளிகள்)
வேறு (03 புள்ளிகள்)

(உயர் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்)

40 புள்ளிகள்

04. சிரேஷ்டத்துவம்

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 1 ஆம் தரத்திற்கான சேவைக் காலத்திற்கு - 10 புள்ளிகள்

- வருடத்திற்கு 01 புள்ளிவீதம் அதிகபட்சம் 10 வருடங்களுக்கு
- வருடத்திற்கு குறைந்த மற்றும் 06 மாதங்களுக்கு கூடுதலான காலவரையறையிற்கு 0.5 புள்ளி
- 06 மாதங்களிற்கு குறையாத மற்றும் 03 மாதங்களிற்கு கூடுதலான காலவரையறையிற்கு 0.25 புள்ளி

குறிப்பு

03. மாதங்களுக்கு குறைந்த காலப்பகுதிக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

05. சேவை அனுபவங்கள்

- தொழில் நியாய சபைகள் செயலாளர் - 10 புள்ளிகள்

அலுவலகம் அல்லது தொழில் நியாய மன்றொன்றில் முகாமைத்துவசேவை உத்தியோகத்தராக சேவையாற்றி இருத்தல்
(வருடத்திற்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சமாக 10 வருடங்களுக்கு)

- பிரதான முகாமைத்துவசேவை உத்தியோகத்தராக சேவையாற்றுதல்

(வருடத்திற்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சமாக 05 வருடங்களுக்கு - 05 புள்ளிகள்

15 புள்ளிகள்

குறிப்பு

- சேவை அனுபவத்திற்கு 08 மாதங்களிற்குக் குறையாததும் ஒரு வருடத்திற்கு குறைந்த காலவரையறைக்கு ஒரு வருடத்திற்கு உரித்தாகுகின்ற புள்ளியளவின் அரைப்பகுதி உரித்தாகும். எனினும் 03 மாதங்களிற்கு குறைந்த சேவைக் காலத்திற்கு புள்ளி வழங்கப்படமாட்டாது.
- சேவை அனுபவம் சம்பந்தமாக சமர்பிக்கின்ற தகவல்கள் குறித்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

06. நேர்முகப்பரீட்சையில் காட்டப்படுகின்ற திறன்கள் - 15 புள்ளிகள்

தொடர்பாடல் திறன் - (05 புள்ளிகள்)
தலைமைத்துவம் - (05 புள்ளிகள்)
ஆளுமை - (05 புள்ளிகள்)

மொத்தம் - 100 புள்ளிகள்

உதவிச் செயலாளர் பதவி வெற்றிடம் நிலவுகின்ற தொழில் நியாய மன்றுகள்

தொழில் நியாய மன்று இல	*முகவரி*
09	நீதிமன்ற கட்டிடத்தொகுதி, நுவரெலியா
10	26/4, தாதிகள் இல்ல வீதி, ஹட்டன்
19	மேல் நீதிமன்ற பூமி, அவிசாவளை
26	நீதிமன்ற கட்டிடத்தொகுதி, லெபீம, கம்புறுகமுவ.
28	நீதிமன்ற கட்டிடத்தொகுதி, சிலாபம்.
33	புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதி, ஹோமாகம.
34	பழைய மொரவக்க நீதவான் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, கல்தொல, கொடபொல.
36	வெலிமட வீதி, பண்டாரவளை.
38	புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதி, பேலி வீதி, நாவலப்பிட்டி.
39	பலாபத்வல, மாத்தளை.
44	நீதிமன்ற கட்டிடத்தொகுதி, அம்பாறை.
திருகோணமலை	நீதிமன்ற கட்டிடத்தொகுதி, திருகோணமலை.
யாழ்ப்பாணம்	03 ஆம் மாடி, மேல் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, யழ்ப்பாணம்

** புதிய ஆட்சேர்ப்புக்களின் போது உள்ளக இடமாற்றம் வழங்குவது தொடர்பாகவும் கவனத்தில் கொள்வதால் மேற்படி வெற்றிடம் நிலவுகின்ற இடங்கள் சிறிய அளவில் மாறுபடலாம்.

10 - 689

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு
இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** : இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான விடயங்கள்	*ஆகக்கூடிய புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	25
மேலதிக தொழிற் தகைமைகள்	20
பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம்	40
தகவல் தொழில்நுட்பம் / கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள்	05
நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள்	10
மொத்தம்	100

குறிப்பு :- ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நியமனம் நடைமுறைக்கு வரும்திகதிகணக்காய்வுச்சேவைஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. அவசியமான தகைமைகள் :- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. கல்வித் தகைமைகள் : பொருத்தமில்லை.

II. **தொழிற் தகைமைகள் :**

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் சங்கத்தின் உறுப்புரிமையைக் கொண்டிருத்தல்.

III. **அனுபவம் :-**

உரிய உயர் தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், வெளியக விண்ணப்பதாரியாயின், உரிய துறையில் நிறைவேற்று மட்ட அலுவலராக பன்னிரெண்டு (12) வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல், அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையிலிருந்தான விண்ணப்பதாரியாயின், நிறைவேற்று அலுவலராக பன்னிரெண்டு (12) வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல்

(அனுபவத்தைக் கணக்கிடுவதற்கான சேவைக்காலத்தைக் கருத்திற்கொள்கையில் அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. மேலும், அனுபவத்தைக் கருத்தில் கொள்ளப்படும் காலப்பகுதியில் அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்பட்டிருக்கக்கூடாது.)

IV. **உடல் ரீதியான தகுதி :-**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்:-**
(i). இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
(ii). சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii). ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv). விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது :-**
2026.11.23 ஆம் திகதி 35 வயதிற்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1981.11.23 ஆம் திகதி முதல் 1991.11.23 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். (அரசங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

3. வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :-

(i). இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii). இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்

நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம் :-** 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950- 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ.200,770/- (படி நிலை 20) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 138,370/- ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

தொடர் இல.		*விடயம்*	*புள்ளிகள்*	*ஆகக் கூடிய புள்ளிகள்*
I.	01.	**மேலதிக கல்வித் தகைமைகள்**		25
	(அ)	பொதுப் பட்டம்	10	
	(ஆ)	விசேட பட்டம்	11	
	(இ)	2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம்	11	
	(ஈ)	2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம்	13	
	(உ)	1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம்	13	
	(ஊ)	1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம்	15	
	(எ)	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்)	18	
	(ஏ)	MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்)	20	
	(ஐ)	மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்)	25	20
II.	02.	**மேலதிக தொழிற் தகைமை** (அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)		
	(அ)	இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் /உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா	07	
	(ஆ)	பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II/இடைநிலை மட்டப் பரீட்சை/ கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல்	09	

தொடர் இல.	*விடயம்*		*புள்ளிகள்*	*ஆகக் கூடிய புள்ளிகள்*
	(இ)	பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல்	12	
	(ஈ)	பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல்	15	
	(உ)	பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (follow) அங்கத்தவராயிருத்தல்	20	
III.	03.	**தகவல் தொழில்நுட்பம் / கணனி இயலுமை தொடர்பான தகைமை** பல்கலைக்கழகமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணனிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.	05	05

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**
சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:-
(i). விண்ணப்பங்களை "செயலாளர், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, இல. 415, கோட்டே வீதி, இராஜகிரிய.", எனும் முகவரிக்கு; 2026.11.23 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii). சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை யு4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii). விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் "சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v). விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படா. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi). வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச் சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii). அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும்வகையில்எனக்குஅனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix). இத்துடன்இணைக்கப்பட்டுள்ளமாதிரிவிண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு நகல் பிரதி வீதம் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

(அ) தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி. (குறிப்பு:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.)

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமான தொழிற் தகைமைகளுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றிதழ்களின் பிரதிகள்;.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள்

(ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில்; பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)

குறிப்பு - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:-**
விண்ணப்பப் படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டீ.கே. விஜேசிங்க
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு

இல. 415, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2026, ஒற்றோபர் 23.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவில்

மாதிரி விண்ணப்பப்படிவம்

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

(அலுவலக பாவனைக்கு மட்டும்.)

(விண்ணப்பிக்கும் மொழி மூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு.திருமதி/செல்வி) : .....
(சிங்களத்தில் /தமிழில்)
(ii) முழுப்பெயர் : .....
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: .....
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K

02. (i) நிரந்தர முகவரி :-.....
.....
(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான:

கையடக்க :

03. (i) பால் நிலை: .....
(ii) விவாகமானவர்/ விவாகமாகாதவர் என்பது பற்றி: .....

04. (i) பிறந்த திகதி :
ஆண்டு:..... மாதம் :..... திகதி :.....

(ii) 2026.11.23 திகதிக்கு வயது:
வருடங்கள்:..... மாதங்கள்: ..... நாட்கள்: .....

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலமா அல்லது பதிவின் மூலமா பெற்றுள்ளீர்கள் என்பது?
.....

(iv) இனம் :.....

(v) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள்

பரீட்சை	*ஆண்டு*	*பாடங்கள்*

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

தகைமைகள்	*ஆண்டு*	*நிறுவனம்*

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

பதவி	*நிறுவனம்*	*காலப்பகுதி*

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ..... தமிழ் : ..... ஆங்கிலம் : .....

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : .....
(ii) திணைக்களம் /நிறுவனம் : .....
(iii) நியமனத் திகதி : .....
(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: .....
(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : .....
(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : .....

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) .....
.....
(ii) .....
.....

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என

என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றுவதற்கும் உடன்படுவதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

.....

திகதி : ..... விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், ... மாதம் ..... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....
கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்

திகதி : .....
இடம் : .....
(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... அவர்கள் ..... ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், ...;.. மாதம் ..... ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.....
அரசாங்க /மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால்
அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி : .....

10 - 742

அரசாங்க சேவை ஆணைக்குழு

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிங்கள அகராதி அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவி மற்றும் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்ப்பு.

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் சிங்கள அகராதி அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவிக்கும் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவிக்கும் (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2026.09.25 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பந்தி 02, இல் குறிப்பிடப்பட்டவை கீழ் குறிப்பிட்டவாறு திருத்தப்படுகிறது.

02. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.11.06 அன்று அல்லது அதற்கு முன்னர் சென்றடையக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 வது மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய,

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

2026, ஒற்றேபர் 19.

10 - 754

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு
சுகாதார மற்றும் வெகுசனஊடக அமைச்சு

இலங்கை ஆயுர்வேத சேவையின் ஆரம்பதர மருத்துவ உத்தியோகத்தர்
பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் DMS/CAD/MOH/CM/Vol.V ஆம் இலக்க 2026.09.23 ஆம் திகதிய கடிதம் மற்றும் 2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆம் திகதிய இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக, ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பிரிவில் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த 177 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்கமைய, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2026 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யும் தகுதியானவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைக்கு அமைவாகந் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆயுர்வேத ஆணையாளர் நாயகம், ஆயுர்வேதத் திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம, என்னும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடதுமூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தர மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மேலும், ஆட்சேர்ப்பு விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்படும் பெயர், சிங்கள மொழி விண்ணப்பதாரர்களால் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பதாரர்களால் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதியாகும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்துபோனது என்றோ அல்லது தாமதமானதென்றோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்புவதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

01. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஆயுர்வேத/சித்த/ யுனானி பட்டத்தைப் பெற்ற பட்டதாரிகள், உரிய வருடங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் திறமைப் பட்டியல் ஒழுங்குமுறை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

பல்வேறு வருடங்களுக்குரிய பட்டதாரிகள் விண்ணப்பதாரர்களாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில், அந்தந்த வருடங்களின் திறமைப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, குறித்த திறமைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறைக்கு முன்னுரிமையளித்து, நியமன அதிகாரினால் நியமிக்கப்படும் பொதுவான நேர்முகப் பரீட்சை சபையினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

02. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்**

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரம்.

03. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :

I. இந்நியமானம் ஓய்வூதிய உரிமையுடையது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

II. இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், ஆரம்ப தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் பதவி உயர்வு வழங்குவது இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு அமைவாகவே இடம்பெறும்.

III. புதிய நியமனங்களைப் பெறுபவர்கள் அவர்களின் திறமை ஒழுங்குமுறையின் அடிப்படையில் வெற்றிடங்கள் உள்ள சேவை நிலையங்களில் நியமிக்கப்படுவர். அத்துடன், ஆரம்ப நியமனத்திற்கு அமைவாகக் கடமைகளைப் பொறுப்பேற்கும் உத்தியோகத்தர்கள் தமது ஆரம்ப சேவை நிலையத்தில் கட்டாயமாக இரண்டு (02) வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை சேவையாற்ற வேண்டும், அக்காலப்பகுதியில் இடமாற்றங்களை எதிர்பார்க்கக் கூடாது என்பதுடன், அக்காலப்பகுதியில் இடமாற்றங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்,இலங்கைச்சனநாயகசோசலிசக்குடியரசின் தாபனவிதிக் கோவை, 2199/10 ஆம் இலக்க 2020 ஒற்றோபர் 27 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக

சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகள், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்.

04. சம்பள அளவுத்திட்டம்

இப்பதவிக்கு ரூ. 91,750 - 3 x 2,400 - 7 x 2,420 - 2 x 2,490 - 16 x 3,900 - ரூ 184,170.00 (SL - 2 - 2025)
எனும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது.

05. வயதெல்லை (2026 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு)

ஆகக்குறைத்த வயதெல்லை: 22 வருடங்கள்
ஆகக்கூடிய வயதெல்லை: 45 வருடங்கள்

06. தகைமைகள்

I. **கல்வித் தகைமைகள்**: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஆயர்வேத/சித்த/யுனானி மருத்துவக் கல்வி தொடர்பான ஐந்து வருட பட்டப்படிப்பிற்குப் பின்னர், ஒரு வருட மருத்துவமனை செயல்முறைப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

II. **தொழில்சார் தகைமைகள்:** இலங்கை ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவுச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

III. **அனுபவம்:** ஏற்புடையதல்ல.

IV. **உடற்தகுதி:** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **ஏனைய தகுதிகள்**:

- விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நற்பண்பும் நல் உடற்தகுதியும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தேவையான தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

07. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்
அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும் உரியவாறு உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சை சபை கோரும் போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்:

(i) பிறப்புச் சான்றிதழ்:
(ii) விரிவான பட்டப்படிப்புச் சான்றிதழ் :
(iii) ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவுச் சான்றிதழ்:
(iv) பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் :
(v) தேசிய ஆளடையான அட்டை.

08. சமர்ப்பிக்க வெண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் 22 செ. மீ x 29 செ. மீ (A4) அளவிலான காகித்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் தலைப்பு 01 முதல் 08 வரையிலான தகவல்கள் முதல் பக்கத்திலும், தலைப்பு 09 முதல் 11 வரையிலான தகவல்கள் இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்பட்டு, அதற்குரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினாலேயே தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்களும்,பூர்த்திசெய்யப்படாதவிண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

உரிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியை www.ayurveda.gov.lk என்ற இணையத்தளத்திலிந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

09. தவறான தகவல்களை வழங்குதல்

- நீங்கள் அனுப்பிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள யாதேனுமொரு தகவல் பொய்யானது என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரியவந்தால், உங்களது விண்ணப்பம் அறிவித்தல் எதுவுமின்றி இரத்து செய்யப்படும்.

- இத்தகைய தவறான தகவல் ஆட்சேர்ப்பின் பின்னரும் கண்டறியப்பட்டால், அதற்குரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவிற்கு உரித்தானது.

11. இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

12. இந்த விண்ணப்பக் கோரல் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்களப் பதமே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைப்படி.

அனில் ஜாசிங்க,
விசேட வைத்திய நிபுணர்
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.
2026, ஒற்றோபர் 17.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும் ☐

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தர மருத்துவ உத்தியோகத்தர்
பதவிக்கான விண்ணப்பப் படிவம் - 2026

1. I. (அ) இறுதியாக வரும் பெயர் முதலெழுத்துக்களுடன் :(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) -
.....
(ஆ) இறுதியாக வரும் பெயருடன் முதலெழுத்துக்கள் (சிங்களத்தில்/ தமிழில்)
.....
II. (அ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) -
.....
.....
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்)
.....
III. மருத்துவப் பட்டப் படிப்புச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளாறு பெயர் (ஆங்கிலத்தில்)
.....

2. I. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) -
(கடிதங்கள் இந்த முகவரிக்கே அனுப்பப்படும்)
.....
.....
II. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :
.....
.....

3. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : .....

4. I. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

II. 2026 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று வயது வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

05. பாலினம்
(உரிய கூட்டினுள் 'X' என அடையாளமிடுக) பெண் ☐ ஆண் ☐

06. திருமணமானவரா/ திருமணமாகாதவரா: திருமணமானவர் திருமணமாகாதவர்
(உரிய கூட்டினுள் 'X' என அடையாளமிடுக) ☐ ☐

07. இலங்கைப் பிரசையா என்பது பற்றி .....

08. நிரந்தர வசிப்பிடத்துக்குரிய

I. மாகாண சபை .....
II. மாவட்டம் .....
III. பிரதேச செயலகப் பிரிவு .....

09. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள்
பட்டப்படிப்பு பற்றிய விபரங்கள்

பி. ஏ. எம். எஸ் (BAMS) ☐ பி. யு. எம். எஸ். (BUMS) ☐ பி. எஸ். எம். எஸ். (BSMS) ☐

(உரிய கூட்டினுள் x என அடையாளமிடுக)

1. பல்கலைக்கழக நிறுவனம்: .....
2. கல்வியாண்டு: ..... (உதாரணம்: 2018/2019)
3. பட்டம் செல்லுபடியாகும் திகதி: .....
4. வகுப்பு: .....
5. பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மொழிமூலம் : .....
6. செயல்முறைப் பயிற்சி பெற்ற வருடம் : .....

11. ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவு பற்றிய விபரங்கள்

1. இலக்கம்: .....
2. வருடம்: .....

இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர், இதில் அடங்கியள்ள ஏதேனும் விபரம் பொய்யானது அல்லது தவறானது என நியமன அதிகாரியினால் கண்டறியப்பட்டால், அதன் காரணமாக நான் இப்பதவிக்குத் தகுதியற்றவராவதற்கும், எவ்வித நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

....
திகதி கையொப்பம்

விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பொலிஸ் சேவையில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்கத்தின் நிரந்தரப் பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுப்பித்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் ..... (முழுப் பெயர்) என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமென்றும் ..... ஆம் திகதி அவரது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை இடப்படல் வேண்டும்)

விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலிருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், அவரது வேலை, நடத்தை மற்றும் வருகை ..... என உறுதிப்படுத்துகன்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

....
திகதி கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை இடப்படல் வேண்டும்)

10 - 741

பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத – வகை 02 சேவைப் பிரிவின் கீழ், பரீட்சைத் தரவு உதவியாளர் பதவியின் (திணைக்களம் சார்ந்த) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத – வகை 02 சேவைப் பிரிவின் பரீட்சைத் தரவு உதவியாளர் (திணைக்களம் சார்ந்த) பதவியின் III ஆம் தரத்தில் நிலவும் 23 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு: முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/CAD/EXAM/CM இலக்கம் மற்றும் 2026.06.26 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இவ் ஆட்சேர்ப்புகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

01. விண்ணப்பபடிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் காணப்படும் “Online Applications – Recruitment/ E. B. Exams” ஊடாக வெளியிடப் பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கக் கூடியது இணையவழி (online) மூலம் மாத்திரமே ஆகும். இணையவழி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை 2026ஆம் ஆண்டு ஒற்றேசபர் மாதம் 26ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன், 2026ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். இப் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, 2027 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்தி வைப்பதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

1.1 தற்போது அரசாங்க மாகாண அரசாங்க/ சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட கோவையில் இணைப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும், சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1.2 விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரை தாமதிப்பதனால் ஏற்படக்கூடிய எத்தகைய பாதகமான நிலைமைகளையும் விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்

2 தகைமை :

2.1 கல்வித் தகைமை :

I. சிங்களம் / தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா./த.)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ./த.)ப் பரீட்சையில், குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலேனும் (பொது சாதாரணப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலப் பாடம் தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

2.2 தொழிற் தகைமை :

குறைந்தபட்சம் கணினி /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 3 அல்லது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் அதற்கு இணையான வேறு பொருத்தமான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

2.3 அனுபவம் :

கணினி தரவுகளை உள்ளீடு செய்யும் பணிகளில் ஆறு (06) மாத கால அனுபவம்

2.4 உடற் தகைமைகள் :

பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் என்பதுடன், சேவையின் தேவைக்கேற்ப பகல் மற்றும் இரவு நேரங்களில் பணியாற்றுவதற்கான ஆற்றலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2.5 வேறு தகைமைகள் :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல்
II. சிறந்த நன்னடத்தையைக் கொண்டவராக இருத்தல்;
III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான (2026.11.20) அன்று, குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;
IV. எந்தவொரு மதத்தினையும் சார்ந்த துறவற நிலையை வகிக்கும் எவரும் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவோ அல்லது பரீட்சைக்குத் தோற்றவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2.6 வயது எல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய, 2008.11.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரும், 1991.11.20 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்)

03. மொழிமூலம் :

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடும் பரீட்சை மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். மேலும், தாங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதியுடைய மொழிமூலமாகக் கருதப்படுவது, தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலமே ஆகும்.

04. ஆட்சேர்ப்பு நடைமுறை :

எழுத்துப் பரீட்சை, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை ஆகியவற்றில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையின்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4.1 எழுத்துப் பரீட்சை :

பாடம்	*காலம்*	*உச்ச புள்ளிகள்*	*சித்திக்கான புள்ளி அளவு*
1. கணினி கல்வியறிவு	2 மணித்தியாலம்	100	40%

பாடத்திட்டம் :

1. கணினி கல்வியறிவு - கணினி / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 3 இற்குரிய பாடத்துறை சார்ந்த அறிவை மதிப்பீடு செய்யும் வினாப்பத்திரம்

குறிப்பு - எழுத்துப் பரீட்சையின் வினாத்தாளில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்து, அவர்களது பரீட்சை இலக்கங்கள்/ அகரவரிசை ஒழுங்கின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கானோர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

4.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :
இதன்போது விண்ணப்பதாரரின் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் செய்முறைத் திறன்கள் பரிசோதிக்கப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்	*உச்ச புள்ளிகள்*	*தெரிவு செய்வதற்குக் கருத்தில் கொள்ளப்படும் குறைந்த பட்சப் புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	30	பொருந்தாது
மேலதிக தொழிற் தகைமைகள்	35	
நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படும் திறமை	05	
மொத்தப் புள்ளிகள்	70	

குறிப்பு: மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகளின் வரம்பிற்குள், ஒவ்வொரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குமான விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்படும்.

4.3 செய்முறைப் பரீட்சை

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களின் தட்டச்சுத் திறனை மதிப்பிடுவதற்காகச் செய்முறைப் பரீட்சையொன்றும் நடாத்தப்படும். இதன்போது, பல பந்திகளைக் கொண்ட வழங்கப்படும் ஆவணமொன்றை, நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கணினியின் மூலம் தட்டச்சு செய்து, அதன் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளும் திறன் மதிப்பீடு செய்யப்படும்.

பரீட்சிப்புக்கு உள்ளாகும் செயற்பாடு	*வழங்கப்படும் உச்ச புள்ளிகள்*
வழங்கப்பட்ட ஆவணத்தின் வடிவத்திற்கமைவாகவே அதற்குரிய அச்சுப் பிரதியினைப் பெற்றுக்கொள்ளுதல்.	10
தட்டச்சு செய்வதற்கும் அதற்குரிய அச்சுப் பிரதியினைப் பெற்றுக்கொள்வதற்கும் எடுத்துக்கொள்ளப்படும் காலம்	10
அதன் பிழையற்ற எழுத்து நடைக்காக	10
மொத்தப் புள்ளிகள்	30

4.4 எழுத்துப் பரீட்சை, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், திறமை வரிசைப்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவையின் நிபந்தனைகள்

I. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது. மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு /விதவையர், தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக, அதற்கான பங்களிப்பு நிதியை நீங்கள் செலுத்த வேண்டும்.

II. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் சோதனைக் காலத்திற்கு உட்பட்டது. பதவியில் சேர்ந்த 03 ஆண்டுகளுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி I வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும். அந்த காலகட்டத்தில் சேவை, வரவு, நடத்தை ஆகியவை திருப்திகரமான மட்டத்துக்கு மேல் இருத்தல் மற்றும் தொடர்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால், நியமிக்கப்பட்ட பதவி உறுதி செய்யப்படும்.

III. 2020.10.16 ஆம் திகதியிட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அது தொடர்பான சுற்றறிக்கைகளின் விதிகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவதற்கு முன்பதாக சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட மொழிமூலத்துக்கு மேலதிகமாக பிறிதொரு அரசகரும மொழியிலும் உரிய தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV. இந்தப் பதவியானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கே மட்டுப்படுத்தப்பட்ட சேவை ஆகும். இருப்பினும், அவர்கள் திணைக்களத்திற்குள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற நியமிக்கப்படலாம். சேவைத் தேவையைப் பொறுத்து பகல் மற்றும் இரவு வேலை ஒழுங்கு இருப்பதால், அந்த நியமனத்தை ஏற்றதன் பின்னர், அதன்படி செயற்படுவது கட்டாயமானதாகும்.

V. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அரசாங்கசேவைஆணைக்குழுவின்நடைமுறை விதிகளுக்கும் தாபனக் கோவை விதிகள், நிதிப் பிரமாணங்கள், திணைக்கள ஆணைகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் பிற விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

06. பெறுபேறுகளை வெளியீடு செய்தல் :
பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும். பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் தபால் மூலமாகவோ அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அறிவிக்கப்படும்.

07. சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) : அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இல் MN-01-2025 இன் கீழ் ரூ. 45230 - 10×540 - 11×630 - 10×890 - 10× 1190 – ரூ.78,360.00

08. பதவி உயர்வு நடைமுறை :
இலங்கை பரீட்சைகள் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத - வகை 2 சேவை பிரிவில் பரீட்சை தரவு உதவியாளர் (திணைக்களம் சார்ந்த) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை பொருந்தும்.

09. விண்ணப்பிக்கும் முறை :

I. விண்ணப்பங்கள் நிகழ்நிலை வழியாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். நிகழ்நிலை வழியே விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை / ஏற்றுக்கொள்ளப்படாமை தமது தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அறியத்தரப்படும். நிகழ்நிலையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) தரவிறக்கவும் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் கடின பிரதியை பின்னர் விசாரிப்புகளுக்கு தம்வசம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு நிகழ்நிலை முறைமையிலுள்ள தகவல்கள் சரியானதாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாக ரூ.600 செலுத்தப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டண முறையின் கீழ் மட்டுமே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(I) எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)

(II) இணையத்தில் பணம் செலுத்தும் வசதியுடன் கூடிய வங்கி பற்றுஅட்டை (Bank Debit Card with Internet Payment Facility)

(III) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கிச் சேவை முறை /Flex செயலியின் மூலம் (Bank of Ceylon Online Banking Bill Payment Method/ Flex App)

(IV) இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் ஊடாகவும் (Bank of Ceylon any Branch)

குறிப்பு : மேற்கூறிய முறைகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

III. கட்டணம் கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தல் குறுஞ்செய்தி (sms) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் தவறுகளுக்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

IV. பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றப்பட மாட்டாது

V. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிட்ட தகைமைகள் கொண்டவர்களே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசித் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பங்களை நிகழ்நிலை வழியாக சரியாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை வழி பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அது தொடர்பாக இணையத்தள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரருக்கு குறுஞ்செய்தி (sms) மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தான் அனுமதி அட்டை பெறாத பரீட்சார்த்தியாயின் இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது குறித்து பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதி செய்வதற்காக தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

VI. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கோ அங்கீகாரம் அளிக்கப்பட்தாகக் கருதப்படக் கூடாது.

VII. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்குத் திருப்தியளிக்கும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

- தேசிய ஆளடையாள அட்டை;
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மறைக்காமலும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்திகளை அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமலிருத்தல் வேண்டும்.

10. பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சைக்கான பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த விதிமுறைகளை மீறும் பட்சத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது இணக்கமின்மை

காணப்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
பலவத்த,
பத்தரமுல்ல,
2026 ஒற்றோபர் 23.

10 - 686

விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2027 பெப்புருவரி மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

★ விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் “our service” என்பதன் கீழுள்ள “Online Applications - Recruitment Exams/E. B. Exams” இனூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026 ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2026, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

★ உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தமது பிரத்தியேகக் கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை நிரூபிப்பதற்கான கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு இறுதி தினம் வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் சகல வித பாதகமான நிலைமைக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்கவேண்டும்.

1.0 ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள்

தொடர் இலக்கம்	*பதவிப் பெயர்*	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*	*ஆட்சேர்க்கும் தரம்*
1	படவரைஞர்கள் (Draftsman)	39	பயிற்சி தரத்தில்(ஒருவருட பயிற்சிக்காக)
2	துளையிடல் உதவியாளர்கள் (Drilling Assistant)	02	பயிற்சி தரத்தில் (ஒருவருட பயிற்சிக்காக)
3	ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) (Research Assistant - Gen)	01	
4	சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்) (Civil Eng. Material Surveyor)	06	
5	மண் பட வரைவியலாளர் (Soil Cartographer)	01	
6	நீரியல் உதவியாளர்கள் (Hydrological Assistant)	03	
7	நீரியல் வெளிக்கள உதவியாளர்கள் (Field Assistant - Hydrology)	01	

தொடர் இலக்கம்	*பதவிப் பெயர்*	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*	*ஆட்சேர்க்கும் தரம்*
8	ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) (Research Assistant - Eng.mat)	01	பயிற்சி தரத்தில் (ஒரு வருட பயிற்சிக்காக)
9	மண் வள ஆய்வாளர் (Soil Surveyor)	04	
10	ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) (Research Assistant)	01	
11	இயந்திரவியல் மேற்பார்வையாளர் (Mechanical foreman)	04	111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் இருப்பினும் ஆட்சேர்க்கப்பட்டதுடன் முதல் 06 மாதங்களுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இயந்திரவியல் வேலைத் தளத்தில் சேவையுடன் பயிற்சியளிக்கப்படும்.

1.1 பதவிக்குரிய கடமைகளின் தன்மை

தொடரிலக்கம்	*பதவிப் பெயர்*	*வழங்கப்படும் செயற்பாடுகள்*
1.	படவரைஞர்கள்	1) பொறியியல் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் திட்ட வரைப்படம், அடிப்படை வழியலகு (Basic Parameters) படவரைபுகள் குறிப்பு மூலம் விபரமான படவரைபுகளைத் தயாரித்தல்/பரிசீலித்தல்: நில அளவை, மற்றும் (contour line maps) மூலம் குறுக்கு முகமாக, நெடுக்கு வெட்டுமுக வரைபடங்களைத் தயாரித்தல் / பரீட்சித்தல், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள காணித் துண்டுகள் பற்றிய வரைபடங்கள், காணிகளைக் கையகப்படுத்தும் பட வரைபுகள் பராமரித்தல் செயற்படுத்தல் மற்றும் தயாரித்தல் / பரிசீலித்தல் 2) அளவீட்டுக் கணிப்பு : விலை பகுப்பாய்வு / கணிய விலைபற்றுச் சீட்டுத் தயாரித்தல் / பரிசீலித்தல் 3) வேலை மதிப்பீடு பரிசீலனை செய்தல்- வேலை மதிப்பீட்டுக்கிணங்க பெறுகைகளை செயற்படுத்துவதற்கு உரிய படிவங்கள், அட்டவணையைத் தயாரித்தல் / பரீட்சித்தல் வேலைக்காக கொடுப்பனவு செய்வதற்கு உரிய அளவைப் புத்தகங்கள், கொடுப்பனவு பற்றுச் சீட்டு, இறுதிக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்பவற்றைப் பரிசீலனைச் செய்தல் 4) நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப செயற்பாடு மற்றும் முறையான தரவுகள் பற்றிய அட்டவணையைப் பராமரித்தல்: முன்னேற்ற அறிக்கை / குறிப்பு தயாரித்தல் / பரிசீலனை செய்தல் 5) வரைபுகள், திட்ட வரைபுகள் மற்றும் ஏனைய படவரைபு ஆவணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றை பாதுகாத்தலும் பராமரித்தலும் நிறைவேற்று / முகாமைத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் ஏனைய படவரைஞருக்கான கடமைகள்

தொடரிலக்கம்	*பதவிப் பெயர்*	*வழங்கப்படும் செயற்பாடுகள்*
2.	துளையிடல் உதவியாளர்கள்	• பெரிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத்திற்காக தரையின் பலம் தரை கீழ் நீர்க் கசிவு ஆகியவற்றைப் பரிசீலித்தல் • பாரிய நிர்மாணத்திற்கான அத்திவவாரத்திற்காக பல்வேறு விதமான ஆழமான மட்டங்களிலிருந்து பாறைகள் மற்றும் மண் படிமங்களின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் • பாறைப் படலங்களில் ஏற்படும் கசிவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வலுவூட்டுதல். • நிறைவடைந்துள்ள நிர்மாணங்களில் உள்ள கசிவுகளை சீமெந்து மற்றும் இரசாயன பொருட்களை செலுத்தி கொங்கிரீட் படலங்களை இடுவதன் மூலம் பலப்படுத்தல். • மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான அறிக்கையினை முன்வைத்தல் • மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்காகத் தேவைப்படும் துளையிடல் இயந்திரங்கள், நீர்ப் பம்பி மற்றும் ஏனைய உபகரணங்களையும் அவைக்குரிய டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரங்களையும் செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
3.	ஆராய்ச்சி உதவியாளர்கள்	1. தற்போது இடம்பெறும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் சாத்திய வள .ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மண் மற்றும் நீர் மாதிரிகளில் பௌதீக மற்றும் இரசாயன குணவியல்புகளைப் பகுப்பாய்வு செய்தல். 2. கரைசல் மற்றும் அதற்குரிய கலவை என்பவற்றை முறையாக தயாரித்தல் நாளாந்த பகுப்பாய்வு விடயங்களில் பயன்படுத்தப்படும் நவீன நுண்ணிய இலத்திரனியல் மற்றும் இயந்திர உபகரணங்களை முறையாக பாவித்தல், பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளை சீரமைத்தல்.
4.	சிவில் பொறியியல் (மூலப்பொருள் ஆய்வாளர்)	• நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் (மண் மற்றும் கொங்கிரீட் மூலப்பொருட்களின் குணவியல்புகள் மற்றும் அதன் பலம் பற்றிய ஆய்வில்) ஈடுபடுதல் மற்றும் அத்தரத்தினை சான்றுப்படுத்தல். • அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல்.
5.	மண் பட வரைவியலாளர்	• மண் பரிசீலனை மற்றும் மண் பட வரைபினை ஒன்றிணைத்தலும் தொகுத்தலும் • கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க தேசப்படங்களை வரைதலும் வர்ணமிடுதலும் • நகல் மண் பட வரைபு(Draft Soil Map) மற்றும் இறுதி மண் பட வரைபு (Final Soil Map) என்பவற்றைத் தயாரித்தல் • Aerial Photograph இனை உபயோகித்து காணிகளைத் தரப்படுத்தல், அப்பிரதேசத்தின் மண் பட வரைபு ,கணக்கிடுதல் மற்றும் வர்ணமிடுதலும் தயாரித்தலும். அத்தோடு பொறியியல் அளவையியல் குறிப்பு உரு பெரிதாக்கி வரைதல், சிறிதாக்கி வரைதல், பல்வேறு வித மண் மாதிரிகளுக்கிணங்க புவியியல் சார் திட்டப்படங்களை வரைதல் மற்றும் வழங்கப்பட்ட அறிக்கைக்கிணங்க வரைபடம் (graph) வரைதல்.

தொடரிலக்கம்	*பதவிப் பெயர்*	*வழங்கப்படும் செயற்பாடுகள்*
		• கணினியூடாக மென் பொருளை(softwear) I உபயோகித்து மண் பட வரைபினை தயாரித்தல்.
6.	நீரியல் உதவியாளர்கள்	இலங்கையில் நாடு பூராகவும் உள்ள நீர் நதிப்படுகை மற்றும் நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசங்களை இணைத்து அடிப்படை நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகள், விஞ்ஞான ரீதியிலான செயற்பாட்டினை உபயோகித்து நீரின் விஞ்ஞான பூர்வமான அவசியத்திற்காக தரவுகளை பகுப்பாய்வு செய்தல், கணினியை உபயோகித்து பகுப்பாய்வு செய்தல், நாளாந்த, மாதாந்த, வருடாந்த மற்றும் நீண்ட காலத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல், பொது மக்களுக்கு மற்றும் உரிய நிறுவனங்களுக்காக இத் தகவல்களைத் தயாரித்தல். • சேகரிக்கப்பட்ட நீரியல் மற்றும் காலநிலை தரவுகளை முறையாக பாதுகாத்தல், தரத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தரவு வங்கி (Data Bank) முறையை தொடர்ந்து பேணுதல். • நதிகளில் வெள்ள மட்டம் உயர்வதை நிர்ணயிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற்று கணினி மயப்படுத்தல் மற்றும் புதிய கணித மாதிரிகளை உபயோகித்து வெள்ளத்திற்கு உட்படக் கூடிய பிரதேசங்களை ஆய்வு செய்தல். • வெளிக்கள பரிசீலனையூடாக வெள்ளப்பாதிப்பு மட்டம் மற்றும் இப்பாதிப்புகளுக்கு உட்படும் பிரதேசங்களை அளவீடு செய்தல்.\ • இப்பிரதான ஆறுகளில் அவ்வாறான வெள்ளம் ஏற்படக்கூடிய அல்லது அதற்கு அண்மிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தரவுகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளல், அதற்கிணங்க எச்சரிக்கை விடுத்தல்.
7.	நீரியல் வெளிக்கள உதவியாளர்கள்	நீரியல் பிரிவினூடாக தெரிவு செய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்காக நீரியல் வெளிக்கள அளவீட்டுப் பிரிவுகளை நடாத்திச் செல்லல் மற்றும் அவசியப்படும் கால நிலைத் தரவுகள், மழை வீழ்ச்சி, நதிகளில் பாய்ந்தோடும் நீர் மட்டம் மற்றும் அண்மையிலுள்ள குளங்களின் நீர் கொள்ளளவில் மாற்றம் ஆகியன பற்றிய தரவுகளைச் சேகரித்தல். • அவ்வாறு பெற்றுக்கொண்ட அனைத்து நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகளைப் பரீட்சித்து அட்டவணைப்படுத்துவதற்காக மாத இறுதியில் பிரதான காரியாலயத்திற்கு ஒப்படைத்தல். • நதிகளிலும் கிளை நதிகளிலும் அத்தகைய நீர் மட்டம் காணப்படும் போது வெளியுற்றப்படும் நீரின் கொள்ளளவை அளவீடு செய்தல். வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அல்லது அதற்கு அண்மிய சந்தர்ப்பத்தில் அதற்காக எச்சரிக்கை விடுப்பதற்கு அவசியப்படும் வெளிக்கள தரவுகளை நாளாந்தம் பிரதான காரியாலயத்திற்கு தெரிவித்தல், பிரதான வெள்ள நிலையின் போது அந்நேரத்திலிருந்து வெள்ள மட்டம் வேறுபடுவதைக் குறித்தல்.
8.	ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)	நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களின் பொறுத்தப்பாடு பற்றி வழங்கப்படும் நிர்மாணங்களுக்கு இணங்க பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் பரிசீலனைக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தரத்தினை உறுதிப்படுத்தல், அத்துறையில்பொறியியல்மூலப்பொருளுக்காகதரக்கட்டுப்பாட்டுநடவடிக்கைகளுக்கு (மண் மற்றும் கொங்கீட் பொருட்களின் தன்மை மற்றும் பலம் பற்றிய) சேவையின் அவசியத்தின் அடிப்படையில் ஈடுபடுதல். அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல் மற்றும் தரச்சான்றிதழ் வழங்குதல்.

தொடரிலக்கம்	*பதவிப் பெயர்*	*வழங்கப்படும் செயற்பாடுகள்*
9.	மண் வள ஆய்வாளர்	1. தற்போது இடம் பெற்று வரும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் மண் ஆய்வானது காணிப் பாவனை நடவடிக்கைகளுக்கு அவசியப்படும் வெளிக்களத் தரவுகள் மற்றும் ஏனைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்க ஒவ்வொரு வகைகளையும் தரப்படுத்தல். 2. மண் அமைப்பு முறைக் காரணி: காலநிலை, பௌதீக தோற்றம் மற்றும் பூகோளவியல்) என்பவற்றைக் கவனத்திற்கொண்டு அத்தகைய மண் வகுதிகள் அல்லது தரத்தின் அமைவு என்பவற்றைத் தீர்மானித்தல். 3. சர்வதேச தரத்திற்கு இணங்க விபரங்களடங்கிய குறிப்பினைத் தயாரிப்பதற்காக அவசியப்படும் வகையில் மண் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், அத்தகைய மண் மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காக ஆய்வு கூடத்தில் கையளித்தல், அந்த பகுப்பாய்வுத்தரவு மற்றும் வெளிக்கள பகுப்பாய்வு தரவுகளை அடிப்படையாக வைத்து இறுதி மண் தரவுகளில் சரியானதை உறதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் அதற்கேற்ப Soil Index என்பவற்றைத் தயாரித்தல். 4. உரிய பிரதேசத்தில் வான் நிழற்பட (Aerial Photograph) உபயோகித்து வான் நிழற்பட ஆய்வினை மேற்கொள்ளல். 5. தரவுகள் அவசியப்படும் தீவிரத்தன்மைக்கு இணங்க மண் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிக்களதரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மண்ணின் வகைகளை இனங்காணுதல். 6. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகளுக்கிணங்க (Draft Soil Map) தயாரிப்பதோடு Pentograph இயந்திரத்தினூடாக தேவையான அளவில் தயாரித்தல் 7. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் மற்றும் இணையத்தை உபயோகித்து காணி உபயோக வரைபடத்தைத் தயாரித்தல். 8. G. P. S. (Global Position System) உபயோகித்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் 9. மண்ணில் நீர் கடத்தும் திறன் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் 10. வெளிக்களத்தில் வெளிக்கள ஊழியர்கள், காவலாளிகள் மற்றும் சாரதிகள் போன்றோரின் நிர்வாக நடவடிக்கைகளை (மேற்பார்வை) செய்தல் மற்றும் அவர்களின் நிதி விடயங்களை நேரடியாக மேற்கொள்ளல்.
10.	ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு)	நீர்வலுப்பிரிவு பொறியியலாளர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுதல், நீர்வலுப்பிரிவுக்கு உரிய நிர்மாண வேலைகளில் அனைத்து துறைகளிலும் காணப்படும் உபகரணங்கள், மூலப்பொருட்கள், தொழிலாளர் பரிபாலனம், நீர்வலு மாதிரி செயற்பாடு, கட்டிடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பரிபாலனம், நீர்வலுப்பிரிவுக்குரிய நிர்மாண வேலைக்கான மதிப்பீடு என்பவற்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்குரிய அனைத்து இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை திருத்துதல் சம்பந்தமாக அவ்வுபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய தர அறிக்கையினைத் தயாரித்தல்.

தொடரிலக்கம்	*பதவிப் பெயர்*	*வழங்கப்படும் செயற்பாடுகள்*
11.	இயந்திரவியல் மேற்பார்வையாளர்	சிற்றூழியர்களை நிர்வகிக்கும் போது மற்றும் வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியனவற்றுக்கான பற்றுச் சீட்டுக்களைத் தயாரிக்கும் போது இயந்திரவியல் பொருளியலாளருக்கு உதவுதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் வேலையை ஆரம்பித்தல்.களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் விடயங்களை பொறுப்பேற்றல் பழுதுபார்த்தலுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் மூலப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியசாலைப் புத்தகத்தைப் பரிபாலித்தல், மதிப்பீட்டு நடவடிக்கையின் போது இயந்திரவியல் பொறியியலாளருக்கு உதவுதல், பழுதுபார்க்கப்பட்ட பின்னர் முறையாக அவற்றைக் கையளித்தல் மற்றும் உடைந்த உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை மீள களஞ்சிய சாலைக்கு ஒப்படைத்தல், செய்யப்பட்ட பழுதுபார்த்தல்களை லொக் புத்தகத்தில் பதிதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் இணைந்து பற்றுச் சீட்டுக்கள் தயாரித்தல், பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள், எரிபொருள், உராய்வு எண்ணெய் மற்றும் ஏனைய விடயங்களுக்காக மூலப்பொருள் அறிக்கையினைத் தயாரித்தல். பழுதுபார்த்தலுக்காக இயந்திரவியல் தளத்திற்கு கொண்டுவரப்படும் இயந்திரங்கள், வாகனங்கள் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து இயந்திரவியல் தளத்திலிருந்து பொறுப்பேற்று பழுதுபார்த்தல் முடிவடைந்தவுடன் மீண்டும் களஞ்சியப் பொறுப்பாளருக்குக் கையளித்தல்.

2.0 ஆட்சேர்க்கும் முறை :

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில்; மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்குச் சமனான விண்ணப்பதாரர்களை சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப்பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் சம்மதம் கிடைக்கப்பெற்ற பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது இணையவழி மூலமாகவோ பெறுபேறுகள் விநியோகிக்கப்படும்.

3.0 சம்பளம் :

பயிற்சியளிக்கும் தரம் -

ஒரு வருடபயிற்சியளித்தல் தரத்தில் தான் ஏற்கெனவே பெற்ற சம்பள அளவிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும், அத்தோடு பயிற்சி நெறியின் இறுதியில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் சித்தியடையும் வரை இலங்கைத் தொழில்நுட்பச் சேவையில் ஆட்சேர்க்கும் தரத்தில் ஆரம்ப சம்பள ஏற்றத்திற்கு சமமான வருடாந்த கொடுப்பனவொன்றை சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும். பயிற்சியை திருப்திகரமாக பூரணப்படுத்தி பரீட்சையில் சித்தியடையும் விடத்து 2000.03.02 ஆம் திகதிக்குரிய 07 / 2000 ஆம் இலக்கத்தையுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட தாபனக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க சம்பள மாற்றம் மேற்கொள்ளப்படும்.

III ஆம் தரம் - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் உப பிரிவு 1 இற்கிணங்க பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 52250 – 10x800 – 11x 1190 – 10x1320 -10x 1350 – ரூ. 100040.00 (MN 3 – 2025) ஆகும்.

4.0 சேவைத் தொகுதி - மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம்

4.1 தரம் - III ஆம் தரம்
II ஆம் தரம்
I ஆம் தரம்

4.2 பதவியின் தன்மை – இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. உரிய ஓய்வூதிய திட்டம் பற்றி அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

5.0 சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்

5.1 பயிற்சிக் காலத்தின் இறுதியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.
பயிற்சியளித்தல் திட்டத்திற்கு உள்ளெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய பயிற்சிக் காலத்திற்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

5.2 பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தனது பயிற்சிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் பின்னர் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

5.3 III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருடத்திற்கு பதிற்கடமை காலத்திற்குட்படுத்துவதோடு, பதிற்கடமை காலத்திற்குள் தனது கடமை மற்றும் நடத்தை என்பன திருப்தியானதாக இருப்பின் பதிற்கடமை காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

6 வயதெல்லை : ஏற்புடையதல்ல

7 தேவையான தகைமைகள் :
7.1. கல்வித் தகைமைகள்

7.1.1. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம்; மற்றும் வேறு ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

7.2. தொழில்சார் தகைமைகள் :
பதவிக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சார் தகைமைகளுடன் உரிய துறையில் 05 வருட அனுபவம்

பதவியின் பெயர்	*தொழிற்சார் தகைமைகள்*
படவரைஞர்கள்	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைஞர் பற்றிய ஒரு வருட முழுநேர பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.
துளையிடல் உதவியாளர்கள், சிவில் நீரியல் உதவியாளர்கள், நீரியல் வெளிக்கள உதவியாளர் ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்கள்	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருடங்கள் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் (NCT - Civil) கற்கை நெறியை பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.
மண் வள ஆய்வாளர்	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் விவசாயக்கல்வி பற்றிய சான்றிதழ் கற்கை நெறியை மேற்கொண்டு அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல். (இக்கற்கை நெறி பகுதி நேரமாக இருப்பின் மூன்று வருடமும் முழு நேரமாக இருப்பின் குறைந்தபட்சம் 09 மாதத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.)
ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது)	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் இரசாயனவியல் பற்றிய சான்றிதழ் கற்கை நெறியை மேற்கொண்டு அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல். (இக்கற்கை நெறி பகுதி நேரமாக இருப்பின் மூன்று வருடமும் முழு நேரமாக இருப்பின் குறைந்தபட்சம் 09 மாதத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.)

ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு)	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருடங்கள் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் (NCT - Civil) கற்கை நெறியை பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல். அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் பதவிக்குரிய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பம் பற்றிய தேசிய சான்றிதழ்பத்திர கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.
இயந்திரவியல் மேற்பார்வையாளர்	அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருடங்கள் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ்; (NCT - Mechanical) கற்கை நெறியை பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

7.3 அனுபவம் :
ஆரம்ப அல்லது அதற்கு மேலுள்ள சேவைத்தொகுதியில் நிரந்தர, திணைக்கள பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 10 வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.4 தேகாரோக்கிய தகைமைகள் :
அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.5 ஏனைய தகைமைகள் :

I. குறித்த தினத்திற்கு உடன் முன்னதாக அரசாங்க சேவையில் நிரந்தர திணைக்களத்தின் பதவியின் கீழ் 05 வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பதோடு அது பற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக எழுத்து மூலப் பரீட்சைக்கு அமர்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது உத்தியோகத்தர் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பத்தில் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே.

8.0 பரீட்சையின் செயற்திட்டம்

பரீட்சையானது இரு பாடங்களைக்கொண்ட எழுத்து மூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

வினாப்பத்திரம் /பாடப்பரப்பு	*காலம்*	*புள்ளிகள்*	*சித்தியடையும் புள்ளிகள்*
நுண்ணறிவுப் பரீட்சை	ஒரு (01) மணித்தியாலம்	100	40
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	மூன்று (03)மணித்தியாலங்கள்	100	40

8.1 பரீட்சைக்கான பாடப்பரப்பு

1. நுண்ணறிவுப் பரீட்சை(சகல பதவிகளுக்கும் பொதுவானது)

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
நுண்ணறிவுப் பரீட்சை	விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை

2. பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை

• பட வரைஞர் பதவிக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	பட வரைதலின் மூலத் தத்துவத்தைப் பாவித்து கொடுக்கப்படும் கட்டமைப்பிற்கிணங்க பொருளொன்றின் அல்லது ஒரு பகுதியின் குறுக்குமட்ட முன் அல்லது பின் பக்க தோற்றத்தினை வரைதல்.

• துளையிடல் உதவியாளர்/ சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர் / ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) பதவிகளுக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	அடிப்படைக் கணித மற்றும் விஞ்ஞான அறிவு அத்தோடு அடிப்படை சிவில் பொறியியல் அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும் .

• மண் வள ஆய்வாளர்கள் பதவிகளுக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	அடிப்படைக் கணித மற்றும் விஞ்ஞான அறிவு அத்தோடு மண் பற்றிய இரசாயனவியல் அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும்.

• நீரியல் வெளிக்கள உதவியாளர்கள் / நீரியல் உதவியாளர்கள் பதவிகளுக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	அடிப்படைக் கணிதம் (க.பொ.த. (சா./தர)மட்டம்) விஞ்ஞான அறிவு அத்தோடு நீரியல் துறைபற்றிய அறிவு, அடிப்படை சிவில் பொறியியல் அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும்

• ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) பதவிகளுக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	அடிப்படைக் கணித மற்றும் விஞ்ஞான அறிவு பகுப்பாய்வு இரசாயனவியல் பற்றிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும்.

• மண் பட வரைவியலாளர் பதவிகளுக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	அடிப்படைக் கணித மற்றும் பட வரைபு பற்றிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும்.

• இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக

வினாப்பத்திரத்தின் பெயர்	*பாடப்பரப்பு*
பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை	வாகனஇயந்திரஉபகரணங்கள்மற்றும்வேலைத்தளத்தினைப் பரிபாலித்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய பொது அறிவு மற்றும் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும்

9.0 விண்ணப்பிக்கும் முறை :

9.1. இணையவழி (online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென்பிரதி மற்றும் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என தினைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக/ பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E- Mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (Instructions) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிப்படும்.

9.2. விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவது இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த பதவி என்பதை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் (✓) என்ற அடையாளத்தின் மூலம் தெளிவாக அடையாளமிடுவது கட்டாயமானதாகும். யாரேனும் ஒரு விண்ணப்பதாரர் பல பதவிகளுக்காக விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக இணையவழி (Online) மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.ஒரு விண்ணப்பதாரி உயர்ந்தபட்சம் மூன்று(03) பதவிகளுக்கே விண்ணப்பிக்க முடியும்.

9.3. விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சை தினத்தில் மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9.4. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம்/ விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும். தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின். அவ்விபரங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

9.5. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதல், பரீட்சைக்கு தோற்றுவதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

9.6. அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

9.7. சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. பரீட்சைக் கட்டணம் :

- பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுதல் வேண்டும்.

  i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)
  ii. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
  iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
  iஎ. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண செலுத்துகை முறை மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

11. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :

11.1. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் செல்லுபடியாகும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. போலியான தகவல்களுக்கான தண்டனை

12.1. எவரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தன்மையை இரத்துச்

செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

13. பொதுவான விடயங்கள்:

13.1. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

13.2. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும்.

13.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலம் சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்திரி. பீ.எம். ஜயதீர
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2026 ஒற்றோபர் 19.

10 - 743